97

உ



சுபமஸ்து.

# தமிழகம்.

வால்யூம். 1 | 1905 ௵ எப்ரல் ௴ | நம்பர். 1.

## இந்துமதமும் தற்காலத்து சாஸ்திரங்களும்.*

ஜெகத்துக்கெல்லாம் மூலகாரணமான ஓர் தத்துவத்தைக் கண்டறிதலே மதத்தின் கோட்பாடாம். சாஸ்திரங்களின் கோட்பாடும் அதுவேயாகும். ஆயினும் யதார்த்தத்தை அறியப்புகும் மார்க்கத்தில் மதத்திற்கும் சாஸ்திரத்துக்கும் ஒரு பேதமுண்டு. சாஸ்திரம் வெளிப்படையாய் நமக்குத் தோற்றும் வடிவங்களையும் ஆவிர்ப்பவங்களையும் செவ்வையாய் ஆராய்ந்தறிந்து, அவைகளுக்குள்ளே மறைந்து கிடக்கும் தத்துவத்தை அறிய முயல்கின்றது. பல கூறுபட்டு வெவ்வேறாகத் தோற்றிச் சமத்துவம் இல்லை என்று சொல்லும்படி கிடந்த பல உருவங்களையும் பொறுமையாய்க் கண்டு, ஆராய்ந்து, உருவங்களின் பேதங்களை மனத்தால் நீக்கி, ஒருமைப்பாடுகளை நினைந்து, இவ்வெல்லா உருவங்களிலும் ஓரே உயிர் நின்றுலாவுகின்

* அன்னி பெஸண்டு அம்மாள் செய்த ஓர் உபந்நியாசத்தின் சுருக்கம்.

றது என்று காண்கின்றது சாஸ்திரம். அஃதன்றி, உயிர் நிலையைப்பிடித்து அதிற்படிந்து அதன் தன்மையை யறிந்து அதன் விருத்திக்கேற்பப் பலவிதமான உருவங்கள் உண்டாகின்றன என்று காண்பது நமது மதம். இந்தப் பேதமே அன்றி மதத்திற்கும் தற்காலத்து சாஸ்திரத்திற்கும் வேறோர் பேதமில்லை. சாஸ்திரம் வெளியே அலைந்து திரிந்து பிராகாரந்தோறுஞ் சுற்றிக் கர்ப்பக்கிரகத்திற்கு வருகிறது. மதம் கர்ப்பக்கிரகத்திலிருந்து பிராகாரங்களையுஞ் சுற்றுமதில்களையும் பார்க்கிறது. தற்காலத்தில் சாஸ்திரங்களெல்லாம் மதங்கள் எப்போதுங் கூறினவைகளையே வேறுவிதமாய் எடுத்துக் கூறுகின்றன என்று காட்டப்புகுந்தேன்.

உயிர் பலவிதமாய் வேறுபட்டுத் தோற்றுவதற்குக் காரணம் பிரகிருதியே என்பது ஓர் மதம்; அதாவது பிரகிருதி பலவிதமாய்க் கூடுதலாலே பலவிதமான உயிர்ப்பேதங்கள் உண்டாகின்றன என்பதாம். இது ஓர் மதமாக, மற்றோர்மதம் உளது. உயிர் பலவிதமாய் தான் தோன்றவேண்டும் என்று முயல்வதாலே பல உடற் பேதங்கள் உண்டாகின்றன என்பது தற்காலத்து மதம். ஆங்கில சாஸ்திரங்கள் ஓர் முப்பது வருஷங்களுக்குமுன், முந்திக் கூறப்பட்ட மதத்தை எடுத்துக் கூறிக்கொண்டு நின்றன. 1875ஞு ஆகஸ்டுமீ 19உ ஆங்கிலேய சாஸ்திரக்கூட்டத்தார் (British Association of Scientists) முன்னிலையில் டிண்டால் என்ற ஆசிரியர் (Prof. Tyndall) "பிரகிருதி யிடத்தில் உயிர்ப்பேதஞ் செய்யும் சக்தியுளது" (Matter contains in itself the potency of all forms of life) என்று கூறினர். சுமார் பதினைந்து வருஷங்களுக்கு முன் அதே சபையில் அதேபீடத்திலிருந்துகொண்டு மற்றோர் சாஸ்திரி உவில்லியம் குருக்ஸ் (Prof. William Crookes) என்பவர் பிரகிருதியை மாறுபாடுசெய்து வெவ்வேறுடலைச் செய்வது உயிரின் சக்தியே என்று நினைக்கிறேன் என்றார். ஆதலின், ஆங்கில சாஸ்திரம் முதல் ஓர் மதத்தைக் கைக்கொண்டு பிறகு உண்மையான ஓர் மதத்தை அங்கீகரித்து வருகிறது. நமது இந்துமதம் தொன்றுதொட்டு சைதன்னியத்தின் விளையாட்டாலே, பிரகிருதி பஞ்சீகரணத்தை அடைந்து உடல்கள் வெவ்வேறாய் அமைந்தும் வருகின்றன என்று முறையிடுகின்றது. நமது சாந்தோக்கியோபநிஷதத்தில் "முகர

வேண்டும் என்ற பிரஞ்ஞையுடையவன், அவன் ஆத்மா, முகர வேண்டி மூக்கைச் செய்துகொண்டான். பேசவேண்டுமென்ற பிரஞ்ஞையுடையவன், அவன் ஆத்மா, பேசவேண்டிக் குரலைச் செய்துகொண்டான். கேட்கவேண்டும் என்ற பிரஞ்ஞை யுடையவன், அவன் ஆத்மா, கேட்கவேண்டிக் காதைச்செய்து கொண்டான். நினைக்கவேண்டும் என்ற பிரஞ்ஞையுடைய வன், அவன் ஆத்மா, நினைக்கவேண்டி ஞானக்கண்ணான மன தைச் செய்துகொண்டான்'' என்ற வாக்கியங்கள் உள்ளன. தற்காலத்து சாஸ்திரங்கள் இதுதானோ என்று சந்தேகத் தோடு கூறுகின்றன. எல்லாம் நமது மதத்திலே தெளிவாகக் கிடைக்கின்றன.

மேலும் பிரகிருதிக்கு உயிர் உளதோ? ஆங்கிலேய சாஸ்தி ரத்தில் இது ஒரு பெரிய வினாவாக ஏற்பட்டது. நமது மதம் சைதன்னியம் விளையாடாத பிரகிருதியில்லை என்று கூறுகிறது. கல்லிலும் முள்ளிலும் தாவரங்களிலும் உயிருண்டோ? என்று ஆங்கில சாஸ்திரம் சந்தேகிக்கிறது. உயிர் நின்றுலாவாவிடில், கல்லும் முள்ளும் ஒன்றுமில்லை என்பது நமது மதம். "உயிர் நில்லாத பிரகிருதியில்லை'' என்ற உபநிஷத் வாக்கியத்தை ஆன்ற பெரியவர் காசிநகரத்துக் கங்காநதிக் கரையிலே வெகு காலங் களுக்கு முன்னே கூறினர் என்று அறிந்த ஓர் இந்துமதாபி மானி, கல்கத்தா நகரகாலேஜில் பௌதிக சாஸ்திரம் கற்பிக் கும் போதகாசாரியர், ஜேகதீச சந்திரபோஸ் என்பவர் 1900ளுப ஆங்கில சாஸ்திரக்கூட்டத்தார் முன் இது விஷய மாய் ஓர் வியாசம் படித்தார். உடற்கூறடையாத பிரகிருதிப் பிண்டங்கள் கூட உயிருள்ளன என்று காட்டுவதே நினைவா கப் புகுந்து சில ருசுக்கள் கற்பித்து பௌதிகப் பரீக்ஷைகள் செய்து பொறுமையுடன் இயற்கையை வினவி எழுதியது அவ் வியாசம்! வெறும் பிரகிருதிப்பிண்டங்களான உலோகங்கள் உடற்கூறடைந்த சரீரங்களைப்போலவே விஷமூட்டப் பட லாம். பிறகு மாற்றுக்கொடுத்து உயிர்ப்பிக்கப்படலாம். உலோகம் கட்குடியனைப்போல் வெறி கொள்ளலாம், ஞானி யைப்போலச் சாந்தமடையலாம். வேலைசெய்தால் களைப்படை யலாம். பிறகு இளைப்பாறித் தெம்படையலாம், என்று இவ் விதமாகப் பல ருசுக்கள் காட்டி வெறும் பிரகிருதிப் பிண்டங் கள் கூட உயிருள்ளன என்று காட்டினர். நம் ருஷிகள் கங்கா

திரத்தில் பல்லாண்டுகளுக்கு முன் கூறின உண்மை வாக்கியம்
தற்காலத்துப் பௌதிக சாஸ்திரங்களால் ருசுப்பிக்கப்படுகின்
றன் காணுங்கள்.

இது நிற்க, வேறு விதமான ஆங்கில சாஸ்திரங்களைச்
சற்று பார்ப்போம். ஆங்கில நாட்டில் வைத்திய சாஸ்திரம்
மிகவும் விருத்தியடைந்திருக்கிறது. காந்தத்தின் சக்தியால்
உடலைப்பிடித்த நோய்களை மாற்றிவிடுகிறார்கள். முதன் முதல்
காந்தத்தைக் கையிற்கொண்டு உடலின் வலிகளை வலதுபுறத்
ருந்து இடதுபுறத்திற்கும் இடது புறத்திலிருந்து வலதுபுறத்
திற்கும் மாற்றினார்கள். இவ்வாறு உடலில் ஒரு பாகத்திலி
ருந்து நோயை மற்றோர் பாகத்துக்குத் திருப்பக்கூடுமானால்
உடலிலிருந்தே மாற்றிவிடக்கூடாதோ என்று நினைத்துப் பல
முயற்சிகள் செய்து காந்த சக்தியாலே நோயை உடலிலிருந்
தே பிரித்து வெளியே செலுத்தினார்கள். பிறகு காந்த சக்திக்
குப் பதிலாக மனோ சக்தியை வைக்கலாமோ என்று நினைத்து,
சில முயற்சிகள் செய்து நம்பிக்கையோடு புகுந்து உறுதி
யான மனோசக்தியால் பிறருடைய வியாதிகளைப்போக்க ஆரம்
பித்தனர்! என்ன ஆச்சரியம்! இவனுக்கு இந்த வியாதியான
து நீங்கட்டும் என்று உறுதியாய் நாம் நினைக்கவும், அவ்வியாதி
அவனை விட்டு நீங்குமா? ஆயினும் இதுவே உண்மை என்று
தற்காலத்து சாஸ்திரம் சம்மதித்துவிட்டது! சித்தவசிய ரகசி
யம் (Hypnotism) அறியப்பட்டுவிட்டது! பெரிய சித்தர்கள்
பலவிதமான வியாதிகளை நோக்கத்தினாலேயே நீக்கினர் என்று
பலவிதமான மதங்கள் கூறியுள்ளனவே. இயேசுகிருஸ்து
(Jesus Christ) தனது புண்ணியக் கையாலே தடவிப் பலவித
மான நோய்களைத் தீர்த்தார். நம்முடைய நாட்டில் இவ்வித
மாய் நோய்களைத் தீர்க்கும் சித்தர்கள் அனந்தம். சித்தர்கள்
பொய் என்பது சரியல்ல. நமது புத்தகங்களில் சித்தர் தன்
மையை விரிவாகப் பார்க்கலாம். நமது சாஸ்திரங்கள் உண்
மை என்று கூற இந்தச் சித்தவசியரகசியம் (Hypnotism)
ஒன்றே போதும்.

மற்றோர் வழியை நோக்குவோம். விக்கிரக ஆராதனை
செய்கிறீர்கள். ஆலயங்கள் சமைத்து விக்கிரகம் கர்ப்பக்கிர
கத்திலே சேர சம்பிரோக்ஷணை செய்து பிறகு விக்கிரகம் தொ
ழுகிறீர்கள். நல்லது இது சரியா? இவ்வினாவுக்குச் சரியான

பதில் பௌதிக சாஸ்திரத்தால் தரப்பட்டதோ என்று காண்போம்.—"நீங்கள் எல்லாம் விக்கிரக ஆராதனை செய்பவர்கள். உங்கள் மதம் சரியான மதம் அல்ல!" என்று வீண் வாதம் சொல்லிக்கொண்டு திரிகிறவர்கள் நிற்க. இவர்கள் அறியாதவர்கள். இவர்கள் மாதா கோவில்களிலேயே, மேரி (Mary) மதாசாரியர்கள் (Saints) இவர்கள் படங்களும் விக்கிரகங்களும் இல்லையா? உண்மை சொல்லப்புகுந்தால், விக்கிரக ஆராதனையைக் கொண்டாடாத மதம் இப்பூவுலகத்திலேயே இல்லை. மகம்மதியர் விக்கிரகம் கொண்டாடவில்லை என்கிறார்களோ?-உண்மை! அவர்கள் கடலோடியும் அரேபியா தேசம் சென்று மக்காவில் மேற்குமுகம் நோக்கிய கோவிலுள் பிரவேசித்துக் கர்ப்பக்கிரகத்தில் வழுவழுப்பாய்க் கருங்கல்லாலான சதுரத்தைத் தொழுகின்றனர். அவர்கள் தொழும் காபா (Kaba) விக்கிரகம் அன்றி மற்றென்ன?—உலகமுழுதும் எல்லா மதத்தாராலும் அங்கீகரிக்கப்பட்ட விக்கிரகஆராதனை தப்பென்பது பிழை. நமது கடமை இப்போது என்னவென்றால், நாம் பௌதிக சாஸ்திரமானது விக்கிரக ஆராதனை சரி என்று சொல்வது போலிருக்கிறது என்றோம்; அது எப்படி? பௌதிகம் என்ன சொல்லுகிறது என்று கவனிப்போம்!

சப்தம் உருவத்தைச் சிருஷ்டிக்கிறது!—இது ஓர் உண்மை. ஓம்!—இந்த சப்தத்தால் உலகம் உண்டாகியது. 'சப்தப்பிரமன்' என்பது நம்மதத்தில் கூறப்பட்ட வார்த்தை. தற்காலத்து பௌதிகமும் இதையே சொல்லுகிறது. ஓர் பௌதிக ருசுவைக் காட்டுகிறேன். ஓர் தப்பறை, அல்லது ஓர் மிருதங்கத்தின் கண்ணின்மேல் சிறிய மணற்பொடியை ஆகிலும், சிறிய விதைகளையாகிலும் தூவி விடுங்கள். பக்கத்திலே இருந்து கொண்டு ஓர் வீணையின் தந்திக்கம்பிகளை வருடி ஓர் இனிய சப்தத்தை உண்டாக்குங்கள். இவ்வினிய சப்தத்திற்கு இணங்கத் தப்பறையின் மெதுவான தோலின் அணுக்கள் அசையும். அசையவே தோலின்மேலே தூவிக்கிடந்த மணல் உன்னதமாய் எழுந்து ஓர் வடிவத்தை அடைந்து தப்பறையில் அவ்வடிவமாகவே விழும். ஆதலால் சப்தத்தால் அணுக்களின் சலனமும் வடிவங்களின் அமைவும் உண்டாகின்றன.

சப்தத்திற்கு உருவம் சிருஷ்டிக்கும் சக்தி உண்டென்று பௌதிக சாஸ்திரமும் ஒப்புக்கொண்டது. சப்தத்தால் ஒரு

பொருளின் அணுக்களைச் சலனமடையும்படி செய்யலாம். ஆதலால் விக்கிரகம் வார்க்கப்பட்டவுடன் அந்த விக்கிரகத்திற்கு அதன் அணுக்கள் எப்போதும் ஒரு விதமாய்ச் சலித்துக்கொண்டிருக்கும்படி ஓர் சக்தியை ஊட்டி விடலாம். மகா யோகியர்களும் சித்தர்கள் மகாத்மாக்களும் ஒன்று சேர்ந்து வந்து, வேத மந்திரங்களை உச்சரிக்க வேண்டியபடி சரியான கானத்தோடு உச்சரித்து விட்டார்களானால், அந்த விக்கிரகம் ஓர் சக்தியை அடைகிறது. அந்த விக்கிரகத்தின் அணுக்கள் மனோகரமான ஓர்விதமாய் எப்போதும் சலித்துக்கொண்டேயிருக்கிறது. அதன் அருகில் நாம் சென்றால் ஓர் விதமான வாசனையும் எண்ணத்தின் ஏற்றமும் நற்சித்தமும் பக்தியும் நமக்கு உண்டாகவில்லையா? ஓர் கோவிலில் கர்ப்பக் கிரகத்திற்கு உள்ளே பிரவேசித்த எவனே இவ்விதமான ஓர் மேம்பாட்டை அடையாதவன்?

ஆங்கில சாஸ்திரங்களுள் மற்றோர் நூலும் அதிக விருத்தியடைந்திருக்கிறது. அந்நூல் மனத்தத்துவ நூலே (Psychology). இந்நூலின் ஆராய்ச்சிகள் இப்போது நம்முடைய உபநிஷத் முடிவுகளைப் பற்றின ஆராய்ச்சிகளாக ஆகிறது! கேளுங்கள்? ஆங்கில வித்வான்களின் குணம் ஒன்று! உண்மை எதுவோ அதையே கிரகிக்கும் யோக்கியர்கள். தாங்கள் நினைத்திருந்த விஷயத்திற்கு மாறாக இருக்கலாம் உண்மை. யாரேனும் உண்மை இது என்று அவருடன் தர்க்கித்துக் காட்டுவார்களேயானால் அவ்வுண்மை தங்கள் மனதிற்கு இனிப்பில்லாததாக விருந்தாலும் உண்மையையே கடைப்பிடிப்பார்கள்! மிகுந்த பொறுமையோடு காலம் போவதும் பணம் போவதும் கவனியாமல் அநேக பௌதிக பரீக்ஷைகள் செய்து, அப்பரீக்ஷைகளால் ருசுப்பிக்கப்படும் உண்மைகளை மறையாமல், திருத்தாமல், யுக்திவாதஞ்செய்து தம் மதத்தைச் சாதிக்காமல், ஐயந்திரிபற யோக்கியதையாய் உள்ளதுள்ளபடியே எழுதிவிடுவார்கள்! இக்குணம் மிகவும் அரிது!— இத்தன்மையை உடைய பெரிய சாஸ்திரிகளால் சில அதிசயிக்கத் தகுந்த உண்மைகள் வெளியாயிருக்கின்றன! ஆனல் அவைகள் நமக்கு அதிசய காரமானவைகள் அல்ல! நம்முடைய உபநிஷதங்கள் ஆதியோடந்தமாய் இவ்வுண்மைகளை முறையிடுகின்றன.

முதன் முதல் மனத்தத்துவ நூல் ஜாக்கிராவஸ்தையை மாத்திரம் ஒப்புக்கொண்டதாய் மனோபாவங்களை உணர்ச்சிகள், அறிவு, சித்தம் என மூன்றுவகையாக மாத்திரம் பிரித்து, இப்பிரிவுகளுக்குள்ளாக யூகமும் சாமார்த்தியமும் புலப்படும்படி ஆராய்ச்சிகள் செய்து வந்தது. இது சில மனத்தத்துவ சாஸ்திரிகளுக்குச் சம்மதப்படவில்லை. "மனிதன் தூங்கப்போகிறான். அப்போது சரீரம் படுக்கையில் கட்டையாகக் கிடக்கிறது. அப்போது யாதொரு பிரஞ்ஞையும் இருக்கக் கூடாதே. அப்படியிருக்க என்னமோ சொப்பனங்கள் உண்டாகின்றனவே. அவைகள் என்ன?"—இந்த வினாவை வைத்துக்கொண்டு இந்தத் தத்துவ விசாரகர்கள் ஏக்கங் கொண்டார்கள். ஆகிலும் மகா நிபுணர்கள் ஆனதினாலும் சத்திய சந்தர்கள் தைரியவான்கள் ஆனபடியினாலும் ஓரே ஏக்கமாய் ஏங்கிப்போகாமல் யோசித்தார்கள். பரீக்ஷைகள் செய்தார்கள். இயற்கை என்னும் சரஸ்வதியை வினவினார்கள். ஜாக்கிராவஸ்தையைத் தவிர மற்று இரண்டு அவஸ்தைகள் சொப்பனாவஸ்தை ஸுஷுப்தி எனக் கூறப்பட்டுள்ளன என்று நமக்கெல்லாந் தெரியும். சிலருக்குப் பரிச்சயமும் உண்டு---ஆயினும் ஆங்கில சாஸ்திரிகளுக்குப் புதிது. அவர்கள் இப்போதுதான் அறியும்படி வினை கிடந்தது. அவர்கள் சொப்பனாவஸ்தையை அறிந்த தன்மையைச் சிறிது கூறுகிறேன்.

சொப்பனாவஸ்தையிலுள்ள பிரஞ்ஞையைப் பரிசோதிக்க ஆரம்பித்தார்கள். இந்தப் பிரஞ்ஞை ஜாக்கிரா வஸ்தையிலுள்ள பிரஞ்ஞையைக் காட்டிலும் விஸ்தாரமுள்ளது, பெரியது, காலவரை இடவரை அற்றது, என்று கண்டார்கள். முன்னே சித்த வசிய ரகசியம் என்று ஓர் சாஸ்திரம் சொன்னேனே, அந்த சாஸ்திரம் மிகுந்த உபயோகப்பட்டது. யாரையாகிலும் விழிப்பில் தூக்கத்தை அடையும்படி செய்யலாம். நமது மூளையை ஆசனமாகக்கொண்ட ஜாக்கிராவஸ்தையிலிருந்தும் ஒருவனை விடுவித்துச் சொப்பனாவஸ்தையில் செலுத்திவிடலாம். இவ்விதமாய் ஒருவனைச் சொப்பனாவஸ்தையிற் செலுத்தியும், இயற்கையில் அவனே தூக்கசம்பவத்தில் ஜாக்கிராவஸ்தையிலிருந்து நழுவிச் சென்ற காலையிலும், அவன் பிரஞ்ஞையைப் பரிசீலனை செய்தார்கள். பிரஞ்சு தேசத்திலே தான் இவ்விதமான ஆராய்ச்சிகள் ஜாஸ்தி.

அங்கே ஒருவன் தூங்கச்சென்றான். பக்கத்திலே நமது தத்துவ விசாரகர்கள் இருந்து, அவன் சொப்பனவஸ்தையில் இருக்கும்போது அவன் முதுகுப்புறமாகக் கழுத்தில் மெதுவாகத் தொட்டார்கள். மனிதன் விழித்தெழுந்தான். ஒரு நிமிஷங்கூட இல்லை. "நீ என்ன சொப்பனங் கண்டாய்" என்றார்கள். "ஐயா நான் ஒருவனைக் கொலைசெய்தேன். என்னை எல்லாருங் குற்றஞ்சாட்டினார்கள். கைதியாகப் பிடித்து ஜெயிலில் அடைத்து வைத்துக் கோர்ட்டுக்கு இழுத்துக்கொண்டு போனார்கள். கோர்ட்டில் வழக்கு நடந்தது. வெகுகாலம் பேசினார்கள். கடைசியாக நியாயாதிபதி, 'இவன் கொலையாளிதான். இவனைத் தூக்குப்போடுங்கள்' என்று தீர்ப்புச் செய்தார். என்னைக் கொலைக்களத்திற்கு இழுத்துக்கொண்டு போனார்கள். தூக்கு மரத்தில் ஏற்றினார்கள். கழுத்தை வெட்டக் கத்தியை வீசினார்கள். கழுத்திலே பட்டது. நான் விழித்துக்கொண்டேன்" என்றான். என்ன சொப்பனம்! சரீரத்தைத் தவிர ஒரு புருஷன் இருக்கிறான் என்பதற்கு நமக்கு வேறோர் ருசுவும் வேண்டுமா? தத்துவ விசாரகர்கள் ஆச்சரியமடைந்தார்கள். இவன் கழுத்தைத் தொட்டு ஒரு நிமிஷங்கூட ஆகவில்லை. அதற்குள்ளாக ஓர் பாரதம் நடந்து விட்டதாகச் சொல்லுகிறான். இத்தனை விவகாரத்திற்கும் காலமெங்கே? ஜெயிலிலிருந்து கோர்ட்டுக்கும் கோர்ட்டிலிருந்து கொலைக்களத்திற்கும் போனானாம்! இவனோ படுக்கையிலேயே கிடந்தான், இதென்ன விபரீதம்! இதற்கென்ன பொருள் கொள்ளலாம்! சொப்பனவஸ்தையில், பிரஞ்ஞைக்குக் காலத்தையும் இடத்தையும் ஜயிக்கக்கூடிய வலிமையுண்டாகுமோ?

மேலும் ஓர் சிறிய குடியானவர் பெண், சொப்பனத்தில் இராஜாங்க தந்திரம் கலந்த ஓர் பெரிய சங்கடமான புதிரை அவிழ்த்துவிட்டாளாம்! ஜாக்கிராவஸ்தையில் புலப்படாத பிரஞ்ஞைக்குச் சொப்பனவஸ்தையில் ஓர் விதமான தெளிவும் நிர்மலமும் வலிமையும் ஏற்படுகிறது. ஒருத்தி தான் பிணவோடு விவகாரங்கள் செய்யுங்காலையில் ஒருநாளும் அறியாத பல பாஷைகளைச் சொப்பனவஸ்தையிற் பேசினளாம். மற்றுமோர் கதையுளது. லியோனி (Leoni) என்றவோர் பிரஞ்சுக் குடியானவன் மகள், மிகவும் அசடு. ஒன்று சொன்னாலும் கிரகித்துக்கொள்ளும் சக்தி கிடையாது. இவளை நமது தத்துவ

விசாரகர்கள் உடலிலிருந்தும் பிரித்துச் சொப்பனவஸ்தையில் விட்டார்கள். அப்போது அவள் கேட்ட வினைக்களுக்கெல்லாம் உத்தரம் அளித்தாள். ஜாக்கிரா வஸ்தையில் கிடக்கும் லியோனி மிகவும் முட்டாள் என்றாள். தான்தான் மிகவும் அறிந்தவள் என்றாள். பிறகு தத்துவ விசாரகர்கள் அவளைச் சுஷுப்தியில் அனுப்பினர். லியோனிக்கு இன்னமும் நிர்மலமான மற்றோர் பிரஞ்ஞை உண்டாகியது. சொப்பனவஸ்தையிலிருந்த லியோனியும் அசடுதான், நான் தான் நிர்மலமான லியோனி என்றாள். சொப்பனவஸ்தையிலுள்ள லியோனி ஜாக்கிராவஸ்தை லியோனியையும், சுஷுப்தி லியோனி ஜாக்கிராவஸ்தை லியோனியையும் சொப்பனவஸ்தை லியோனியையும், அறிந்தனர். ஆச்சரியம்! மேன் மேலும் செல்லச்செல்ல நமது பிரஞ்ஞை விசாலிக்கிறது!

வேறு இன்னம் கூறவேண்டுவதென்ன? உமது உபநிஷத் வாக்கியங்களில் கூறப்பட்ட ஜாக்கிரா, சொப்பன, சுஷுப்தி அவஸ்தைகள் எல்லாம் தற்காலத்து மனத்தத்துவ சாஸ்திரத்தால் ஒத்துக் கூறப்பட்டதாய் விட்டன. மேற்றிசை நாட்டுச் சாஸ்திரங்கள் கீட்டிசை நாட்டு உபநிஷதங்களை வற்புறுத்திக் கூறுவதாய்ச் சாக்ஷிகள் காட்டி மெய்ப்பிக்கின்றன. நமது வேதங்கள், உபநிஷதங்கள், தர்சனங்கள் அறியாப்பிள்ளைகள் உளறினவைகள் அல்ல. முதிர்ந்த பெரியவர்கள் தீர்க்க தரிசிகள், சித்தர்கள் கூறிய வாக்கியங்கள். அன்னவைகளைக் கைவிடாதீர்கள்!

பத்திராதிபர்.

---

# ஆயுள் விருத்தி நூல்.

## நான்முகம்.

இந்த நூல் கி. பி. 18-வது நூற்றாண்டின் கடைசியில் ஜர்மானிய தேசத்து ஆயுர்வேத பண்டிதராகிய டாக்டர் C. W. Hufeland (ஹியூப்லாண்டு) அவர்களால் ஜர்மானிய பாஷையில் எழுதப்பட்டுள்ளது. அவருடைய கருத்தானது

வைத்தியர்களின் பொதுவான அபிப்பிராயத்துக்கு விரோதமானது. எப்படியெனில், ஒரு வியாதி ஒரு சீவனுக்கு உண்டாகும்பட்சத்தில் அந்த நோய் உடனே நிவர்த்திக்கப்படவேண்டுமென்றும் அப்படிக்கல்லாத பட்சத்தில் கட்டாயமாய் ஆயுள் விருத்திக்கு ஆனி நேரக்கூடுமென்பதையும் வைத்தியர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் அவருடைய கொள்கையோ அத்தன்மைத்தன்று. வியாதிகள் அநேகமாய் சம்பவிக்கிறதானது இயற்கை. இயற்கையானது ஆயுள் விருத்திக்குச் சாதகம் உண்டாக்குகிறதென்றும், நல்ல பழக்கமும் நல்ல மனதும் சன்மார்க்கமும் மாத்திரமே ஆயுள் விருத்திக்கு முக்கியகாரணமென்றும் நிரூபிக்கிறார்.

ஆகையால், இந்தப் புத்தகத்தை முழுவதும் படிக்கும் பட்சத்தில் அவருடைய அபிப்பிராயமானது நம்மவர்க்கும் யுக்தி அனுபவத்திற்கும் பொருந்தியதென்று செவ்வனே விளங்கும்.

பின்பு இந்த நூலானது உபயோகத்தினிமித்தமும் பொருள் ரசத்தின்பொருட்டும் பிராஞ்சு பாஷையிலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

தமிழில் மொழிபெயர்ப்பின், நம் தமிழ் நாட்டாருக்கும் பயன்படுமெனக்கருதி எனது சிற்றறிவுக்கெட்டின வரையில் மொழிபெயர்க்கப்பட்டதில் சொற்குற்றம் பொருள்குற்றமிருக்கும்பட்சத்தில் ஆன்றோர்கள் அவமதியாது, முன்னோர்களின் கொள்கையைத் தத்தம் அனுபவத்திற்குக் கூடியவரையில் அனுபவித்து சுகஜீவிகளாய் ஆயுள் விருத்திபெற்று அமலன் அடியிணைக்காளாவார்களென்று நம்புகின்றனன்.

## நூல்.

### வெண்பா.

1. முத்திக்கு வித்தாய் முதற்பொருளாய் ஞானமெனும்
புத்திக்கு நேரே பொருந்துவதாய்ச்—சித்தி
யருளு மரும்பொருளே யாயுள் விருத்தி
தருமிந்த நூல்வழியே தான்.

2. கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் நடித்ததொரு தன்மைபோல்—யானும்
மொழிபெயர்த்தேன் முன்னோர்கள் மூதுரையை யென்றன்
பிழைபொறுப்பார் கற்றோர் பெரிது.

ஆயுள் விருத்தியைப்பற்றி நம்மவர்களும் முன்னம் உன்னத நிலைமையிலிருந்த கிரேக்க தேசத்தார்களும் இட்டாலியா தேசத்தார்களும் பற்பலவிதமான அபிப்பிராயத்தையுடையவர்களாயிருந்தார்கள். அவைகளில் சிலவற்றை இங்ஙன் எடுத்துச்சொல்வது அவசியமாயிருந்ததுபற்றிப்பின்வருபவைகளைச் சுருங்கச் சொல்லி அவைகளைப்பற்றிய எனதபிப்பிராயத்தையும் எடுத்துக்காட்டுகிறேன்.

(1) காயசித்தி மார்க்கம்.—ஞானசித்தர்களுடைய அனுபவத்திற்குப்பொருந்தி அவர்களால் உலகத்தார்க்கு எடுத்துச் சொல்லப்பட்டது. சித்தர்கள் வாக்கியம் உண்மையேயாயினும் துர்ப்பலமடைந்துள்ள தேகிகளாயுள்ள இக்காலத்தவர்களால் அனுஷ்டிப்பது நிரம்பவுந் துர்லபமானது.

(2) வயது முதிர்ந்தவர்கள் தேகபலத்தைப் பெறுவதற்கு வாலிபர்களுடன் சிநேகக்கூட்டுறவால் தேகபலம்பெற்று நீண்டகாலம் உயிர்வாழலாமென்பது.

(3) ஒருவன் ஜனனம் எடுத்த காலத்திலேயே அவன் கன்மவினையை அனுசரித்து இளமை, பிணி, செல்வம் முதலியன ஏற்கனவே அமைக்கப்பட்டனவென்றும், இன்னின்ன கிரகங்களின் நட்பு, பகை, நீசம், உச்சம் முதலியவற்றினால் அவன் அவனுடைய வாழ்நாளில் சுக துக்கம், நன்மை தீமை, இன்பத் துன்ப முதலியவைகளை அனுபவிக்கும்படி நேருகிறதென்றும், சீவப்பிரயத்தனத்தில் பிரயோசனமில்லையென்றும், சொல்லுவோர் துணிபு. ஆனால் இது ஒருவாறு உண்மையேயாயினும் சீவர்கள் நித்தியர்களானதாலும், வினையினால் பந்தப்பட்டதினிமித்தம் வினையை அனுபவிக்கவேண்டிற்றென்றும், யாவரும் "துக்கநிவர்த்தி ஆனந்தப்பிராப்தி" யில் பிரவர்த்திக்கவேண்டியதே முக்கியம் என்பது எனதுகொள்கை. அதையொழித்து கிரக நிலைமைப்படி நடக்குமென்றிருக்கும் பட்சத்தில் சீவர்கள் வாணாளை வீணாளாக்கி இம்மைக்கும் மறுமைக்கும் பயனற்றவர்களாயிருக்கிறார்கள்.

(4) பலஹீனமுள்ள வயது சென்றவர்களுடைய இரத்தத்தை இரத்த நாடிகளினின்றும் வெளிப்படுத்தி அவைகளுக்குப் பதிலாக வாலிபர்களான திடசரீரிகளுடைய இரத்தத்தை நிரப்பி ஆயுளை விருத்திசெய்வது. இந்த முறையினால் இரத்தம் எடுக்கப்பட்டவர்களின் தேக நஷ்டத்துடன், இரத்தம்

கொடுக்கப்பட்டவர்களுக்கு புது இரத்தம் பொருந்தாமல் உயிர்ச்சேதம் நேர்ந்ததாகவும் தெரிகிறது. அதற்கு உதாரணமாக, 1492-ம் வருஷத்தில் (Pope Innocent viii) எட்டாவது போப் இன்னஸண்டு வியாதியடைந்த காலத்தில், மூன்று வாலிபர்களுடைய இரத்தம் எடுக்கப்பட்டு மூன்று தடவை போப்புக்கு இரத்தநாடிகள் வழியாய் உட்செலுத்தப்பட்டும் அவருக்கு புது இரத்தம் பொருந்தாமல் இறந்துபோனதுடன், இரத்தம் எடுக்கப்பட்டவர்களுக்கு இரத்தம் எடுத்தகாலத்தில் இரத்த நாடிகளில் காற்றுப் புகுந்ததினிமித்தம் மரித்தார்களென்பதாகவும் தெரிகிறது.

(5) மெஸ்மரிஸிம் (Mesmerism) அல்லது மாக்னிடிஸிம் (Magnetism) என்று ஆங்கிலத்திற் சொல்லப்படுகிறதும் தமிழ்ப் பாஷையில் துரியதரிசனம் அல்லது இவ்வித்தையைப் பழகினவன் பிறர்களுடைய உணர்ச்சி, மனம் முதலியவற்றைத் தன் மனதுக்கு இணங்கச்செய்கிறதென்றும்சொல்லப்படுகிறது. இது முதல் முதலில் மெஸ்மர் என்னும் ஜர்மானிய வைத்தியரால் பிரசித்தப்படுத்தியபடியால் அவர் பேரை அநுசரித்து அவர் கொள்கையானது மேஸ்மரிஸிம் என்று பெயர் பெற்றது. இவ்வித்தை காந்தம் ஊசியை இழுப்பதுபோல் ஒருவனுடைய வியாதி முதலியவற்றை யாதொரு சாதனமன்னியில் சொஸ்தம் செய்வது. இப்பழக்கமானது அநுபவத்தில் அபூர்வமாயும் சாதாரண ஜனங்களால் அநுபவத்துக்குக் கொண்டுவருவதற்குக் கூடாததுமானது.

(6) கடைசியும் உறுதியும் உண்மையாயுமான கொள்கையாவது :-ஒவ்வொருவருடைய நற்பழக்கத்தினுலும் சரீரப் பயிற்சியினுலும் மனவமைதியினுலும், வியாதி வந்தபொழுது உடனே பரிகாரம் தேடாமல் பொருத்தலாலும் ஆயுள் விருத்தி உண்டாகுமென்பதே. (Nature's cure, அதாவது) இயற்கை வியாதியைச் சொஸ்தப்படுத்துகிற தென்பதும், (Habit is second nature அதாவது) பழக்கமே இயற்கையாய் விடுமென்பதும் முன்சொன்னதை அநுசரித்தே சொல்லப்பட்டிருக்கின்றன. எவராவது இயற்கையை முரணும் பட்சத்தில் ஜீவனுக்கு ஆனிநேருமே யல்லாது சுகம் விளையாதென்பது யாவரும் தெளிவுறத்தெரிந்த விஷயம். ஆகையால் எவருக்கும் ஆயுள் விருத்தி யுண்டாகவேணுமென்ற நோக்கம் ஏற்படுமே

யொழிய ஆயுள் குறைவதற்குவிருப்ப முண்டாகாது. ஒவ்வொரு ஜீவனும், வியாதியஸ்தனானாலும் சரி, அந்தகனானாலும் சரி, அங்கஹீனனானாலும் சரி, ஊமையன் ஆனாலும் சரி, உன்மத்தன் ஆனாலும் சரி, ஆயுள் விருத்தியையே நோக்குகிறான். அபூர்வமாகச் சிலர் தற்கொலை செய்துகொள்ளுகிற விஷயம் ஏற்படுகிறது. அதற்குக் காரணம் வியாதியின் கொடுமையினாலோ மனவேதனையின் செயலாலோ தங்கள் உடலை மாய்த்துக்கொள்ளுகிறார்களே ஒழிய சீவனை வெறுத்தார் இல்லை. இதற்குச் சாட்சியாகக் கைவல்ய நவநீதத்தில்,

வேகின்ற கோபங்களாலென்னை நான் கொன்று விடுகிறேனென்று சிலபேர், சாகின்றபடியினாற் றன்னையே தான்கொன்று சாவனெனல் சங்கையலவே, தேகந்தனைக் கொல்லு மவனால் விடப்பட்ட தேகமவனல்லன் மகனே, ஆகந்தனிற் கோபமலது தனை யொருநாளு மான்மா வெறுப்பதில்லையே.

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆயுள் விருத்தியைப்பற்றி முதன்மையாகத் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கிய விஷயங்களாவன:—ஜீவ இயற்கை (Nature of life)யைப்பற்றியும் எல்லா ஜீவனுக்கும் முக்கிய காரணமாகிய ஜீவ சக்தியை (Vital powers)ப்பற்றியுமாம். ஆதலால் அந்தப் பரிசுத்த அக்கினியாகிய சீவனின் உள்ளியற்கையைப்பற்றியும் அது எவற்றால் போஷிக்கப்படுகிறதென்றும் எவற்றால் துர்ப்பலப்படுத்தப்படுகிறதென்றும் நாம் தெளிவாய்த் தெரிந்துகொள்ளவேண்டிய தவசியமல்லவா? இயற்கையைப் பரிசோதிக்கப்புகுங்கால் அது மற்றவையைப்போல் வருந்த மடையாது நமக்கு வேண்டினவற்றைக் கொடுக்க இனிமைத்தாயாயிருக்கிறது. அந்த இயற்கையே தன்னை நாடினவர்களிடத்தில் பிரியம் வைத்து அவர்களுக்கு அருமையாகிய பரிசளிப்பதாயுமிருக்கிறது. ஆதலின் நாம் மிகவும் சாந்தகுணமுடையோராய்ப் பொறுமையுள்ள யுக்தியனுபவத்தோடு இயற்கையை நாடும் பட்சத்தில், அது உண்மையாகவே நமக்கு வேண்டினவற்றைக் கொடுப்பதற்குத் தயாராயிருக்கிறது.

ஜீவன் என்பது என்ன? ஜீவ சக்தி யென்பது யாது? என்னும் வினாக்களுக்கு விடையளிப்பதானது தோற்றத்தில் எளிதாகப் புலப்படினும் ஆழ்ந்து யோஜிக்கில் மிகவும் கஷ்ட

சாத்தியமாயிருக்கிறது. ஜீவசக்தியானது இயற்கையினுடைய எல்லாசக்திகளுள்ளும் மிகவும் பொதுவானதும் அறிவுக்கு அதீதமாயும் வலுவமைந்ததாயுமிருக்கிறது. அது எல்லாவற்றிலும் நிரம்பி ஒவ்வொன்றையும் அசைப்பிக்கிறது. உண்மையாகவே இது உலகத்திலுள்ள சட இந்திரிய பிராணி (physical organised world) களினுடைய சக்திகளெல்லாவற்றினுக்கும் மூலாதாரமான வஸ்துவாயிருக்கிறது. ஒன்றைச் சிருட்டித்தும் அதை இரட்சித்தும் மீண்டும் புதுப்பிக்கிறதும் (renew) அதுவே. முதல் முதலில் உண்டாக்கினவராகிய கர்த்தாவினால் செய்யப்பட்டது போலவே, அநேக ஆயிர வருடங்கள் சென்றும் இலட்சணத்தோடும் புதுமையோடும் அந்த ஜீவ சக்தியினாலேயே ஜீவன் விருத்தி செய்யப்படுகிறது. அது அளவற்றதாயும் அழிவில்லாததாயும் கடவுளுடைய உண்மையான வெளித்தோற்றமாயுமிருக்கிறது. சுருங்கச் சொல்லின், அது எல்லா இந்திரியங்களையும் பரிசுத்தப்படுத்துவதாயும் மகிமைப்படுத்துவதாயும் ஆன்மாவுக்கும் எண்ணத்துக்கும் தூண்டுகோலாயு மிருக்கிறது. எல்லா அறிவுள்ள பிராணிகளுக்கும் (rational beings) உணர்ச்சியையும் அனுபவத்தையும் கொடுக்கக்கூடியதும் அதுவே. ஆகையால், ஒரு பிராணிக்கு ஜீவசக்தி எவ்வளவு ஜாஸ்தி கம்மியாக அமைந்திருக்கிறதோ அந்த அளவின் பிரகாரம் ஜீவனின் இன்பத்தையும் துன்பத்தையும் நிர்ணயிக்கக் கூடியதாயிருக்கிறது; ஜீவசக்தி அதிகப்பட்டிருக்கும் பட்சத்தில், சுறுசுறுப்பும் கன்மாக்களில் பிரவிருத்தியும் ஜாஸ்திப்படுகின்றன; குறைவுபட்டிருக்கும் பட்சத்தில், அதிகத்துன்பமும் மனத்தளர்ச்சியும் உண்டாகின்றன. ஜீவ சக்தியைப்பற்றி அவயவப்பிராணிகளிடத்தில் கூர்மையாகப் பரிசோதித்தால், அந்த சக்தியினுடைய குணமும் விதியும் பின்வருமாறு ஏற்படுகின்றன.

1. ஜீவசக்தியானது நாம் பழகிய வரையில் ஏற்பட்டுள்ள இயற்கையின் சக்திகளெல்லாவற்றுள்ளும் மிகவும் நுட்பமும் எல்லாவற்றிலும் ஊடுருவிச் செல்வதும் தோற்றத்திற்கெட்டாததாயுமிருக்கிறது. இந்த விஷயத்தில், வெளிச்சம், மின்சாரம், சாந்தம் இவைகளோடு பார்வையில் ஒருவாறு சம்மந்தப்பட்டதாகத் தோற்றியபோதிலும், உண்மையாக விசேஷித்த சக்தியுள்ளதாக இருக்கிறது.

2. அது எல்லாவற்றிலும் நிறைந்திருக்கும். சில வஸ்துக்களில் ஜாஸ்தியாய்க் கலக்கப்பட்டும் சிலவற்றில் கூட்டுறவு குறைவுபட்டுமிருக்கிறது. ஜீவவணுக்களின் மாறுதல்களையே அவய்வச்சேர்க்கை (Organic combination) என்றும், அங்கங்களின் கட்டமைதி (structure of component parts) என்றும் சொல்லுகிறோம். இவைகளையுடைய வஸ்துக்களுக்கு அவயவவஸ்துக்கள் (organised bodies) என்றும் சொல்லுகிறோம். அவைகள் தாவர வஸ்துக்களும் ஜீவ வஸ்துக்களுமாம் (plants and animals). இந்த அவயவக்கட்டுப்பாடானது காந்த சக்தியினுடைய தன்மையைப்போல், விசேஷமாய் ஒத்திருக்கக் காணுகிறோம். காந்த சக்தியானது வெளிக்குத்தோற்றமில்லாதிருந்தும் அயசம்பந்தத்தில் காணப்படுகிறதாயிருக்கிறது போலவே, ஜீவ சக்தியும் அவ்வாறே தோன்றாமல் தோன்றுகிறது. அதற்கு உதாரணம் ஒரு முட்டையிலுள்ள வஸ்துவுக்கு ஜீவ சக்தி வெளிப்படப் புலப்படாதிருந்தும் கூட, அந்த முட்டைக்கு உஷ்ணம் கொடுக்கப்பட்ட மாத்திரத்தில் குஞ்சுகளாகிய ஜீவன்கள் உற்பனமாகின்றன.

3. அந்த சக்தியானது உறுதியான நிலைமையையும் சுயேச்சையையுமுடையதாயிருக்கிறது. இந்த விஷயத்தில் அக்கினியையும் மின்சாரத்தையும் ஒத்திருக்கிறது. அக்கினியும் மின்சாரமும் அவைகளின் குணங்களை வெளிக்குக்காட்டாமல் யாதாமொரு வஸ்துவில் தங்கியிருந்தும் தகுதியான தூண்டுகோலால் (stimulus) தூண்டப்பட்ட காலத்தில் மாத்திரம் அவைகளின் குணங்களைப் பகிர்முகமாய்க் காட்டுவதுபோல், ஜீவ சக்தியும் வஸ்துக்களில் அசைவற்று நின்று அவைகளை நசித்துப்போகாதபடி சவரட்சணை செய்துகொண்டிருக்கக்கூடும்.

(இன்னும் வரும்.)

குமாரசாமி மேற்கொண்டார்.

# பூகம்பமும் எரிமலையும்.

(65-ம் பக்கத்தொடர்ச்சி)

அக்கினிமலைக்குழாயின்பக்கங்கள் கற்குழம்பாகிய கிட்டங்களால் பலப்படுகின்றன. பல தடவைகளில் அக்கினிமலை கற்குழம்பைக்கக்கிய காலங்களில், மேன்மேலும் படிந்த கிட்டங்களின் பளுவால் அம்மலையின் கிரேடர் விரிய ஆரம்பிக்கிறது. அதன் பிளப்பு அதிகமாக, குவிந்த வடிவினையுடைய எரிமலையின் ஒருபக்கம் சரியும். இம்மாதிரியாகச் சரிந்த சிறிய எரிமலைக் குன்றுகளைப் பிரான்ஸ் (France) தேசத்து மத்திய இடங்களில் காணலாம். சில தடவைகளில் எரிமலையின் பக்கம் சரியாமல் பிளக்குமாயின், அதன் வழியாய் வெளியேறின கற்குழம்பு ஆறுபோலச் செல்ல அவ்வளவு அதிகமில்லாவிடின், அம்மலையின் பக்கங்களில் பாய்ந்து பெரிய உயர்ந்த சுவர்கள் போல் தோய்ந்து தங்கிவிடும். அப்படித்தோய்ந்து தங்கியவைகளுக்கு 'எரிமலைப்பக்கவிலா' என்றுபெயர். வேறு சில சமயங்களில் கற்குழம்புகள் அதன் வாயில் படிந்து உறுதியான கிட்டங்களாக அமைந்து அம்மலைத் துவாரத்திற்கு ஓரடைப்பான் போலாகி அதில் ஸ்திரமாய்த் தங்கிவிடினும் விடும். அப்படி அது தங்கிவிட்டால், அம்மலையின் பலஹீனமான இடத்தில் பிறகு உண்டாகிற உருகிய கற்குழம்புகள் தாக்கிப் புதிய துவாரத்தை, அதாவது கிரேடரை, உண்டுபண்ணும். சிசிலித்தீவிலுள்ள எட்ன என்னும் எரிமலையின் கிரேடர்கள், செழுந்திய பெரிய மரத்தின் பலகிளைகள்போன்ற தன்மையுடையனவாய் நாலாபக்கங்களிலும் அமைந்திருக்கின்றன. அதில் ஒரு கிரேடர் 900 அடி உயரத்துக்குமேலிருக்கிறது.

(இன்னும்வரும்.)

K. இராமாநுஜ ஐயங்கார்.

# கொடைவள்ளலாகிய லாரென்ஸோ என்பவர் சரித்திரம்.

(39-ம் பக்கத்தொடர்ச்சி.)

இவைகளெல்லாவற்றையுந் தவிர, பிரதிமைகளமைக்கும் வித்தைக்கென்று லாரென்ஸோ தனியாக அர்ப்பணம்செய்த ஒரு சிங்காரத்தோட்டம் இருந்தது. அந்தத்தோட்டத்தைப் பிராசீனமான முகபிம்பங்களாலும், பிரதிமைகளாலும், அவன் நிறைத்துவைத்தான். அங்கே கலைகளை ஆராய்ச்சிசெய்வோர்களைச்சேர்த்துவைத்துக்கொண்டு, அங்குஉலாவித்திரிந்து அவ்வித்தியார்த்திகள் அடையும் அபிவிருத்தியைக் களிகூர்ந்த நெஞ்சத்தோடு உற்றுப்பார்த்துக்கொண்டு காலத்தைச் செலவிட்டான். ஒருநாள் சதுரப்பாடான நெற்றியும், கொஞ்சம் தட்டையாக இருந்த மூக்கும் உள்ள ஒரு இளைய வித்தியார்த்தி விலங்குருவுள்ளதென்று கருதப்பட்ட ஒரு வனதேவதையின் தலையைக் கல்லுளியால் சலவைக்கல்லினின்று செதுக்கி உருவாக்கிக் கொண்டிருக்கையில், லாரென்ஸோ அங்குவந்து சேர்ந்தான். லாரென்ஸோவின் கண்கள் மிக்கபயிற்சிபெற்றவைகளாதலால், அவன் அச் சிறுவனுடைய ஊக்கம் நிறைந்த வேலைத்திறமையைக் கண்டதும், அவனிடத்தில் மிகுந்த அற்புதமான புத்திசாதுரியம் உண்டென்பதை உடனே அறிந்துகொண்டான். லாரென்ஸோ உடனே அவனைத் தன் இல்லத்திற்கு இட்டுக்கொண்டுபோய், தனக்கு இணையான செல்வவான்போல் அவனை நடத்தி, அவன் கல்வியாராய்ச்சி நடத்த அவனுக்கு வேண்டிய உதவிபுரிந்து தைரியப்படுத்தினான். அச் சிறுவன் வெகு தீவிரமாகப் பூரண அபிவிருத்திபெற்று, தன் காலத்துச் சிற்பிகள் எல்லாரும் தனக்குப் பின்னிடையும்படியாக முன்னிட்டுச் சென்றான்.

அவன்தான் மிக்கேல் அஞ்சேலோ என்னும்கீர்த்திபெற்றசிற்பி.

கொடைவள்ளலான லாரென்ஸோ தன் வாழ்நாளின் உத்தமபாகத்தில், உயர்ந்த கீர்த்திபெற்று, 1402௵ தேகவியோகமடைந்தான்.

உடையார்கோவில், அப்பாசாமி ஐயர்.

# சிறுவர் சிறுமிகளுக்கான பக்கம்.

## சிற்றம்பல நாட்டான்.

### உடைந்த கப்பலினின்று தப்பிப்பிழைத்தவர்களைக் காப்பாற்றிய உபகாரி.

தஞ்சாவூர் ஜில்லா சாவடிக்குப்பம் என்கிற ஊரில் சிற்றம்பல நாட்டான் என்று பெயருள்ள நாட்டாமைக்காரச் செம்படவன், 1904-ம் வருஷம் டிஸம்பர் மீ 18௳ திருமுல்லைவாசலுக்குச் சமீபத்தில் உடைந்துபோன காபூல் என்று பெயரிடப்பட்டிருந்த சிட்டகாங்கு தேசத்துக் கப்பலிலிருந்து தப்பிப்பிழைத்தவர்களைக் காப்பாற்றின நற்செய்கையை நமது துரைத்தனத்தார் மிகவும் மெச்சி அங்கீகாரம் செய்திருக்கிறார்கள். இதன் பொருட்டு 10 ரூபாயும் ஒரு தங்கத்தோடாவும் கலெக்டரவர்கள் அச்செம்படவத்தலைவனுக்கு பயிரங்கமாகப் பரிசளிக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். நாகப்பட்டணம் துறைக்காவல் உத்தியோகஸ்தர் (Port officer) இது விஷயமாகச் செய்த விசாரணையால் விளங்குவது பின்வருமாறு:—

காபூல் என்னும் அம்முழுகிப்போன கப்பல் 250 டன் உள்ளது. அக்கப்பலிலிருந்த 17 மனிதர்களில் 7 பேர்கள் இறந்துபோனார்கள். மிகுந்தவர்களில் ஒருவன் கரைசேர்ந்ததும் இறந்தான். சென்னைக்கு ரயில் மார்க்கமாக அனுப்பப்பட்ட பாக்கி ஒன்பது பேர்கள் டிஸம்பர் மீ 24௳ அங்குபோய்ச் சேர்ந்தார்கள். ஆபத்துக்குள்ளாகும் கடலோடிகளைக் காப்பாற்றும் விதிப்பிரகாரம் எஸ். எஸ். நூரானி என்னும் நீராவிக்கலத்தின் மூலமாய் அவர்கள் சுதேசத்துக்கு அனுப்பப்பட்டார்கள். செம்படவர்கள் உடைந்த கப்பல் கரையோரமாக ஒதுங்கிக்கிடந்ததைக் கண்டபோது, தப்பிக்கரைசேர்ந்த பத்துப்பேரும் காயம்பட்டு மூர்ச்சித்துக் கிடந்தனர். செம்படவத் தலைவனாகிய சிற்றம்பலநாட்டான் மிகுந்த ஜீவகாருண்யத்துடன் நடந்துகொண்டதாகத் தெரிகிறது. சதுப்புநிலத்தின் வழியாக மூர்ச்சித்துக் கிடந்த மனிதரைக் கொண்டுபோவது கஷ்டமாக இருந்தபடியால் பல கிராமங்களுக்கு ஆட்களை அனுப்பி வஸ்திரங்கள் வரவழைத்து உடம்புகளுக்கு இதமாகப் போர்த்தி,

கடற்கரையிலேயே பெரிய சொக்கப்பானை வளர்த்து அந்தத் தீயின் உஷ்ணத்தைக்கொண்டு அந்த நிர்ப்பாக்கியர்களுக்கு இதமுண்டாக்கிஅரக்கு முதலியவைகளைப்போட்டு உடம்புகளில் நன்றாகத் தேய்த்து பிரஞ்ஞை வரும்படி முயற்சி செய்வித்தான்; பிறகு அவர்களைக் கிராமத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்த்துச்சாப்பாடுமுதலிய சௌகரியங்களைச் செய்வித்தான். சதுப்புநிலத்தின் கோடியில் சாவடி என்னும் கிராமம் ஒதுக்குப்புறமாகக் கிடக்கிறது. அங்கிருந்து திருமுல்லைவாயிலுக்குக் கால்வாயின் வழியாகவும், ஆற்றின் வழியாகவும் படகேறிச் செல்லவேண்டியது. ஆகவே காருண்யமுள்ள செம்படவன் எவ்வளவு சிரமப்பட்டுப் பலபேர்கள் உயிரைக் காப்பாற்றியிருக்கவேண்டும்? உயிர்காக்கும் நற்செய்கைகளைத் துரைத்தனத்தார் இவ்வாறு மேன்மைப்படுத்துவது மிகவும் நன்று.

உடையார்கோவில், அப்பாசாமி ஐயர்.

---

# தமிழ் நூல்களும் நூலாசிரியர்களும்.

## 3. நச்சினார்க்கினியார் காலம்.

ஜீவகசிந்தாமணி இலக்கணையார் இலம்பகம், 672-வது பக்கம் 85—86 செய்யுள்களின் உரையில், நச்சினார்க்கினியார்

''ஸங்கதாய வராய ஸமர்ப்பியதே ஸ்வாமிநாது வதூர்ஜ ஜலபூர்வகம் |
ஸ்தாப்பியதே ச விவாஹமஹீதலே பாவகோ விதிவன் மதுபர்க்கக: |''

என்று ஒரு சுலோகத்தை எடுத்துக் கூறியிருக்கிறார். ஸ்ரீமாந் வே. சுவாமிநாத ஐயர் அவர்கள் அந்த மேற்கோள் "கபர்த்தி காரிகை''யிலிருந்து எடுக்கப்பட்டது என்று அதே பக்கத்தின் அடியில் குறிப்பிட்டிருக்கிறார். அந்த சுலோகம் கபர்த்திகாரிகையிலுளதே தான். கபர்த்திகாரிகை செய்தவரான கபர்த்தி, வடமொழியில் காளிதாஸனால் செய்யப்பட்ட இரகுவம்சம், குமாரஸம்பவம், மேகஸந்தேசம், பாரவியால் செய்யப்பட்ட கிராதார்ஜ்ஜுனீயம், மாகனால் இயற்றப்பட்ட சிசுபாலவதம், ஸ்ரீஹர்ஷனால் இயற்றப்பட்ட நைஷதம், பட்டி கவியினால் இயற்றப்பட்ட பட்டிகாவியம், வித்தியாதரரால் செய்யப்பட்ட ஏகாவளி என்னும் அலங்கார நூல், வரதராஜரால் ஆக்கப்பட்ட தார்க்கிகரட்சா, பிரசஸ்தபாதரால் செய்

யப்பட்ட பிரசஸ்தபாத பாஷ்யம், இன்னும் தந்திரவார்த்திகம், முதலிய பலநூல்களுக்கு உரை செய்தும், ஸித்தாஞ்சனம் முதலிய பலநூல்களைத் தாமாக இயற்றியும் கீர்த்திபெற்ற கோலாசல மல்லிநாதசூரியின் தந்தை. தெலுங்கு தேசத்தில் ஓரங்கல் நாட்டரசனான வீரருத்திரனால் ஆதரிக்கப்பட்டும் சதாவதானி என்று எங்கும் பெயர் பெற்றும் விளங்கின மல்லிநாதனுக்குப் புத்திரர். இந்த கபர்த்தி சரௌதவிதிகளுக்கும் ஸ்மார்த்தவிதிகளுக்கும் காரிகையாகவிருத்திஎழுதினவர். இதற்கு ஆதாரம்,—கபர்த்தியின் சந்ததியில் பத்தாவது தலைமுறையில் வந்த நாராயணன் என்பவரால் செய்யப்பட்ட நாராயணீயம் என்னும் சம்பூராமாயண வியாக்கியானத்தின் துவக்கத்திலுள்ள பின்வரும் சுலோகங்கள்.

"கோலசன்மாங்வ்யேந்து: ஸ்ரீமல்லிநாதோ மஹாயசா: |
சதாவதானவிக்கியாதோ வீரருத்திராபிவர்ஷித: |
மல்லிநாதாத்மஜ: ஸ்ரீமான் கபர்த்தீ மந்த்ரகோவித: |
அகிலச்ரௌதகல்பஸ்ய காரிகாவிர்த்திமாதனேத் |
கபர்த்திதனயோ தீமான் மல்லிநாதோக்கிரஜ: ஸ்ம்ருத:" |

* * * * *

கபர்த்தி தமது காரிகையில் மேற்கோளாக வேறு ஆசிரியர்களுடைய வாக்கியங்களில் ஒன்றையேனும் எடுத்தெழுதவில்லை. தாமாகவேச்ரௌத ஸ்மார்த்தப்பிரயோகங்களில் இன்னின்னதற்குப் பின் இன்னின்னது என்பதாக வரிசையாகக் குறிப்பிட்டுக்காட்டியிருக்கிறார். அதிலுள்ளவையெல்லாம் அவரது சொந்த வாக்கியங்களே. ஆதலின் கபர்த்தியின் காலம் இன்னதென்று நிதானப்பட்டால், நச்சினார்க்கினியாருடைய காலம் தானாகவே ஏற்பட்டுவிடும்.

(1) உரையாசிரியரான மல்லிநாதன் உரையெழுதியிருக்கிற நூல்களின் நூலாசிரியர்களுடைய காலங்களைப்பற்றிச் சற்றுக் கவனிப்போம். காளிதாஸனும் பாரவியும் கி. பி. 634-வது வருஷத்திற்கு முற்பட்டவர்கள். மாககவி 11-வது நூற்றாண்டிலிருந்தவர். ஸ்ரீஹர்ஷன் கி. பி. 1187 முதல் கி. பி. 1195 வரையில் கானோஜ் நாட்டிலரசாண்ட ஜயந்தசந்திரன் காலத்தவர். வித்தியாதரன் உத்கலதேசத்தில் (அதாவது ஒரிஸ்ஸா நாட்டில்) கி. பி. 1282 முதல் கி. பி. 1300 வரையில் அரசாண்ட நரசிம்மராஜனுடைய காலத்திலிருந்தவர். மேலும், உரையாசிரியரான மல்லிநாதன், சாரங்கதேவரால் இயற்றப்பட்ட ஸங்கீத

ரத்னகரத்திலிருந்தும், போபதேவராற் செய்யப்பட்ட முக்த போதவியாகரணத்திலிருந்தும், மேற்கோள்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார். சாரங்கதேவன் கி. பி. 1209 முதல் கி. பி. 1247 வரையில் அரசாண்ட யாதவராஜனான சிங்கணன்காலத்திலும், போபதேவர் கி. பி. 1271 முதல் கி. பி. 1309 வரையில் அரசாண்ட மேற்படி யாதவ வம்சத்தரசனான இராமச்சந்திரன் காலத்திலும் இருந்தவர்கள். மல்லிநாதன், சிசுபாலவதகாவிய வியாக்கியானம் 2-வது சர்க்கம் 65-வது சுலோகத்தினுரையிலும்,14-வது சர்க்கம் 26-வது சுலோகத்தினுரையிலும் மேதினி என்னும் நிகண்டிலிருந்து மேற்கொள்வாக்கியங்கள் எழுதியிருக்கிறார். அதிகமாக மேற்படி நிகண்டிலிருந்தெடுத்தெழுதவில்லை. ஆகையால் மேதினிகாரர் இவருக்கு ஏறக்குறைய சமானகாலத்தவராயிருந்திருக்கலாம். மேதினிகாரர் கி. பி. 14-வது நூற்றாண்டில் இருந்ததாக டாக்டர் பந்தர்க்கார் தமது மாலதிமாதவ நாடக முகவுரையில் கூறியிருக்கிறார்.

(2) உரையாசிரியரான மல்லிநாதனுடைய காலம் கி. பி. பதினான்காம் நூற்றாண்டின் பிற்பகுதியென்று பூனா காலேஜ் ஸம்ஸ்கிருத பண்டிதர் K. B. பாடக் அவர்கள் தகுந்த பிரமாணங்கள் காட்டி நிரூபித்திருக்கிறார்.

(*See K. B. Pathaks' Edition of Meghaduta, Introduction page 11.*)

(3) மேற்படி உரையாசிரியரான மல்லிநாதனுடைய புத்திரர் குமாரஸ்வாமி, பிரதாபருத்திரீயம் என்னும் நூலுக்கு உரையெழுதினவர். அவர் தமது உரையின் துவக்கத்து 7-வது சுலோகத்தில், "பூர்வத்தில் வித்தியாநாதனால் இயற்றப்பட்ட பிரதாபருத்திரீயத்திற்கு இப்பொழுது நான் உரையெழுதுகிறேன்," என்னும் கருத்துப்படக் கூறியிருக்கிறார். மேற்சொல்லிய பிரதாபருத்திரீயம் ஓரங்கல் நாட்டு காகதீயவம்சத்தில் பெயர்பெற்ற அரசனான பிரதாபருத்திரனைச் சிறப்பித்து அவ்வரசனது காலத்திலேயே இயற்றப்பட்டது. அவ்வரசனது காலம் கி. பி. 1295 முதல் கி. பி. 1323 வரையில் என்பது நன்றாய்த் தெரிந்த விஷயம்.

(4) உரையாசிரியரான மல்லிநாதனுடைய பாட்டனும் கபர்த்தியின் தந்தையுமான மல்லிநாதன் "வீரருத்திரன்" என்னும் அரசனால் ஆதரிக்கப்பட்டவர் என்று ஏற்கனவே கூறி

யிருக்கிறோம். கி. பி. 1295 முதல் கி. பி. 1323 வரையில் அரசாண்ட பிரதாபருத்திரனுக்கே வீரருத்திரன் என்னும் மற்றொரு பெயர் உளது, மேற்சொன்ன பிரதாபருத்திரீயத்திலேயே பற்பலவிடங்களிலும் காணலாம். இந்த மல்லிநாதனை ஆதரித்தது இந்தப் பிரதாபருத்திரனேயாமாயின், உரையாசிரியரான மல்லிநாதனுடைய காலம் ஏறக்குறைய கி. பி. 1373 க்குக் குறைவுபடக் காரணம் இல்லை. இந்தக் காகதீய வம்சத்து பிரளயன் (Prola) என்னும் அரசன் மகன் பெயர் பிரதாபருத்திரன் என ஸூவெல்ஸ் அண்டிக் வெட்டீஸ் (Sewell's Antiquities) இரண்டாவது ஸம்புடம் 172-173-வது பக்கங்களிலும், ருத்திரதேவன் என ஓரியண்டல் ஹிஸ்டாரிகல் மானுஸ்கிருப்ட்ஸ் (Oriental Historical Manuscripts) என்னும் புஸ்தகம் 80-81வது பக்கத்திலும் கண்டிருக்கிறது. ஆனால் வீரருத்திரன்என அவனுக்குப் பெயரிருந்ததாகக் காட்டப்படவில்லை.

(5) உரையாசிரியரான மல்லிநாதனால் இயற்றப்பட்ட நைஷத காவிய வியாக்கியானத்தின் துவக்கத்தில்,

"மாதாமஹமகாசைலம் மஹஸ்ததபிதாமஹம் |
காரணஞ் ஜகதாம் வந்தே கண்டாதுபரிவாரணம்" |

என்று கடவுள் வணக்கத்தில் முதலாவது சுலோகம் கூறப்பட்டிருக்கிறது. (இவ்வூர் புத்தகசாலையிலுள்ள நைஷத வியாக்கியானம் 4598-வது நம்பர் புஸ்தகம் பார்க்க.) மேற்படி சுலோகம் விஜயநகர ராஜவம்சத்து விஜயபூபதி என்னும் அரசனால் சகாப்தம் 1338 (கி.பி. 1416)ல் கொடுக்கப்பட்டதான தான சாஸனப் பட்டயத்தில் முதலாவது சுலோகமாக வரையப்பட்டிருக்கிறது. மல்லிநாதன் தாமெழுதிய இரகுவம்ச காவிய வியாக்கியானத்தின் பாயிரத்தில்

"மல்லிநாதகவிஸ் ஸோயம் மந்தாத்மானுஜிக்ருட்சயா |
வியாசஷ்டே காளிதாஸீயம் காவியத்திரயமனகுலம்" |

என்று கூறியுள்ளார். மேற்படி சுலோகத்தின் கருத்து:—

"(மேலேசொன்னபடி) அப்படிப்பட்டவரான இம்மல்லிநாதகவி, மந்த புத்திகளின் மீது கருணையால், காளிதாஸனது மூன்று காப்பியங்களுக்கும் சங்கடமின்றி உரைகூறுகிறார்," எ-று.

இப்படிச் சொல்லிக்கொண்ட இம்மல்லிநாதகவி, மேற்படி தானசாஸனப்பட்டயத்திலிருந்த சுலோகத்தைத் தாம் எடுக்

தெழுதியிருப்பாரோவென்பதை யோசித்தறிந்து கொள்ளலாம். மேலும் கி. பி. 650-வது வருஷம் வரையில் அரசாண்ட ஹர்ஷவர்த்தனனால் ஆதரிக்கப்பட்ட மகாகவியான பாணபட்டருடைய ஹர்ஷசரிதத்திலுள்ள முதலாவது சுலோகம், விஜயநகரராஜவம்சத்து அரசனான ஹரிகரனால் சகாப்தம் 1317(கி. பி. 1395)ல் கொடுக்கப்பட்டதான தான சாஸனப்பட்டயத்தில் முதலாவது சுலோகமாக வரையப்பட்டிருக்கிறது. (Life and Essays of H. T. Colebrook vol. II page 232 பார்க்க.) இப்படி சாஸனங்களில் வரைவது சாதாரண வழக்கம்.

மேற்கண்ட காரணங்களையெல்லாங் கொண்டு ஆராயுங்கால், உரையாசிரியரான மல்லிநாதன் கி. பி. பதினான்காவது நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்தவரெனத் தெளிவாய் வெளியாகிறது. ஆகையால் கபர்த்தியின் காலம் அதே நூற்றாண்டாகவே இருக்கவேண்டும். கபர்த்திகாரிகையிலிருந்து மேற்கோள் எடுத்தெழுதின உரையாசிரியர், கபர்த்தியின் காலத்திலாவது, அவரது புத்திரனான மல்லிநாதன் காலத்திலாவது, அல்லது பிற்பட்டகாலத்திலாவது தானிருந்திருக்கவேண்டும். ஆகையால் நச்சினார்க்கினியார் பதினான்காவது நூற்றாண்டுக்கு முற்பட்டவரல்லரென்பது நிச்சயம்.

**T. S. குப்புஸாமி சாஸ்திரிகள்.**

---

முருகன்றுணை.

## செய்யுள் (யங)

துறை—செந்துறைப்பாடாண் பாட்டு.
வண்ணம்—ஒழுகு வண்ணம்.
தூக்கு—செந்தூக்கும் வஞ்சித்தூக்கும்.
இவற்றின் பொருளை (யக) ம் செய்யுள் உரையிற்காண்க.
(வஞ்சித்தூக்கு—வஞ்சியடியான் வந்த செய்யுள்)

பெயர்—பூத்த நெய்தல்—நெய்தலானது கரும்பு முதலாய மற்றோரிரையின் பாங்கரிற் செல்லாது தன்னையே நின்று தின்னும்படி தான் போதவுண்ட எருமை நிரையைத் தடுக்குமிடங்கள் என்ற சிறப்பானே இதற்கு இப்பெயராயிற்று.

1—6. தொறுத்த—ஆம்பலார்நவும்:—பொலிந்த வயலின் ஆரல் மீன்கள் பிறழுமிடங்களும், ஏறு பொருத வயலின் உழாது வித்துக்குமிடங்களும், கரும்பின் பாத்தியினிடத்தில் பூத்த நெய்தல் (அக்கரும்பு முதலாய மற்றோரிரையின் பாங்க

ரிற் செல்லாது தன்னையே நின்று தின்னும்படி தான் போதவுண்ட) பெரிய கண்களையுடைய எருமை நிரையைத் தடுக்குமிடங்களும், (புறத்துப்போய் இரைதெவிட்டாத) வளைந்த தலையையுடைய முதிய ஆக்கள் ஒலி மிகுந்த துணங்கைக் கூத்தாடிய இடத்து நின்று ஆம்பலையே தின்னுமிடங்களும்,

7-10. ஒலிதெங்கின்—நாடு:—தழைத்த தெங்கினாலும் செழித்த மருதாலும் அழகிய பொய்கையாலும் புகழ் மிகுந்த பலன் தரத்தக்க இடங்களும், நிறைந்த பகைவர் நாடு,

10-11. கவின்—போல:—கூற்றுவனாலே கொல்லப்படா நின்ற யாக்கை ஒரு காலைக் கொருகால் அழகழியுமாறுபோல, அழிய, அச்சம் விளைவித்து,

12. நீ—பாக்கம்:—நீ சிவந்துவிழித்த, வெள்ளத்தான் அழிவுபடின் அல்லது பகைவரான் அழியாத சீறூர்கள்,

13-19. விரிபூம்—பாழாயினவே:—விரிந்த பூக்களையுடைய கரும்புகள் நிறைந்த கழனிகள் பொலிவழிய அவ்விடங்களில் திரிகாயையுடைய விடத்தேரை மரங்களும் கரிய உடைமரங்களுமுண்டாக, கவைத்தலைப் பேயும் கழுதும் ஊர்ந்து சஞ்சரிக்க, நெருஞ்சி பரந்த பொடியாடுகின்ற பாழிடத்துள்ள விளக்கம் நீங்கி யழிந்த, தாதெருமன்றத்து, போதற்கு உள்ளம் அழியச் செய்தே பின்னும் தம் கரும வேட்கையால் போக மேற்கொண்டவருடைய வலியைக் கெடுத்தலானே பின்பு போக நினைப்பார் நடுங்குதற்குக் காரணமாகிய, பாழாயிற்று.

(பெரும நீ காத்த நாட்டில்)

20-22. காடே—அவ்வனைத்து:—பெருங்காடான இடங்களெல்லாம் முதற்காலத்துக் கோயில்களாயின; சிறு காடான விடங்களெல்லாம் நின்படையாளர் ஒள்ளிய ஆபரணங்களையணிந்த மகளிரோடுறையும் படை நிலைகளாயின; காடும் புறவுமல்லாத பெருவழிகளும் ஆறலைகள்வரும் பிற இடையூறுமின்றி முன் சொன்ன கடவுளும் மள்ளரும் உறையுமிடமாயின.

(அன்றியும்)

22-24. ஞாலத்து-ஓம்பி (காத்தநாடு):—ஞாலத்துப் பலபண்டங்களை விற்கின்றவரது குடிகளைப்பாதுகாக்கின்ற மேற்குடிகளாகிய காணியாளரது பாரம் ஓம்பி நீ காத்த நாடு,

25-28. அழல்சென்ற—பூத்தன்று:—சிங்க விராசியினிடத்துச் சுக்கிரன் செல்லாமல் மழை வேண்டிய விடங்களில் மழை பெய்ய நோயொடு பசி இகந்து ஒருவப்பூத்தது.

(இன்னும் வரும்.)

பண்டிதர், **K. M.** நடேச ஐயர்.

தோய்ந்த பொருணயஞ் சொன்னயம் பலவும்,
வாய்ந்த நலமிகு வார்த்தையி னழகும்,
மெள்ளப் பலவுரை விரும்புவா ருள்ளங்
கொள்ளு மாறு கொடுக்கு மாற்றலும்,
என்னே! இவற்கிணை யிருங்கடல் வளாகத்
துன்னி யொருவரை யுரைத்திட வொண்ணுமோ?
அச்சுத. நிலவிரி செழுந்தபன் னிறமுறும் பூப்போ
லலர்தலை யுற்ற வலரியை நோக்குக!
விசுவ. கல்லா வொருவன் கற்றவர் நாப்பண்
எல்லா மறிந்தவ னெனவெழுந் திருந்து,
விரைந்து பலபட விளம்பும் பயனிலா
வுரைகளில், அவனுடை யுணர்விற் றோற்று
துதித்திடு மற்புத வுரைகளைப் போலக்,
குதித்தெழு பூவின் கோலநீ காண்டியால்!
அச்சுத. தங்கிய மகிழுயர் தருக்களின் றோற்றம்,
மங்கைநல் லார்கள் மணவறைப் பந்தரில்
கரதலம் பொருந்துமண் கலசம் பலவுடன்
வரமுறு பாலிகை வாங்கிநிற் றலையுறும்.
ஒளிர்தரு நின்றதை யுவந்து காண்க நீ!
விசுவ. உளப்பிணிப் பெல்லா மொடுங்குமா றுயர்ந்த
சிவப்புகழ் வாய்ந்தொளி சிறந்த யோகியர்
தவப்பெரு நறுமணந் தழைத்த சரீரந்
தேசுடன் கலந்து திகழ்வது மானுமால்!
அச்சுத. காசினங் கவினுங் கனக மாலையாய்!
வாவியிற் பூத்திதழ் வாடிய தாமரை
மேவிய நறுந்தேன் மிகுந்து நண்பகல்
நீரிற் படிதலா னீனிற வானத்
தூர்தரு செக்கரை யொக்கும்! ஒக்குமால்!
விசுவ. தோழ! நீ நீரிற் றுலங்கிய தேனையே
யாழச் சிந்தனை யாய்ந்து நின்றனை.
மாலை வந்திட மலருங் குவிந்தது.
காலையி லலர்ந்து கவினுறச் சிறந்த
பங்கயம் வாடிய பான்மையைக் கருதி
யிங்கித மாக வியம்பிலை; கேண்மோ!
தாமே யுவந்து, தம்முட லாவி

யெம மாதி யிசைபெற வளித்து, அங்
கிரவல ரின்பம் பெற்றதைக் கண்டு,
பரவச மாகிப், பங்கயக் கண்க
ளானந்த வாரி யரிவி பெருக,
வானந் தமதென வாழ்வுறு வள்ளலார்
மானவே, தம்பான் மகிழ்ந்து வந்து
கான முழக்குங் களிவண் டருந்த
மதுவினைத் தந்து வாய்ந்த வுடற்பய
னிதுவெனக் கொண்டு, இங் கிரங்கி யிரவலர்
வருஞ்செயற் குரிய மாதவ மிலையென
வருந்திச் சோர்ந்து வணங்கி நின்றன!

அச்சுத. பளிங்கிடை வச்சிரம் படப்,படி குயிற்றித்
தளங்கொளச் சமைந்த தடமலர் குவளை,
காசினைப் பறிக்கக் காமுகர்ப் படுத்தும்
வேசை மாதர் வேல்விழி களைப்போல்,
அவிநயங் காட்டி யழைக்கின் றதைய!

விசுவ. புவியெலாங் காக்கும் புரவலன் மதலாய்!
கற்பகச் சோலை காட்சி மிக்குறப்
பற்பல வளங்கள் பயிற்றுவான் வேண்டியே,
ஆசினி புரப்போ னாயிரங் கண்களால்
காசினி யுற்றநின் காவளங் கண்டனன்:
அன்னவன் கண்க ளனைத்து நிழலாய்த்
துன்னியித் தடத்திற் றுலங்கின போலாம்!

காஞ்ச. (தனியே)
அருங்கலை விநோதன். அறிவெனு மளக்க
ரிருங்கரை கண்டோன். என்னுயிர்க் காதலன்.
என்முன் னவனொடு மிசைத்த மொழிகளின்
தன்மையை நாடிற் றகவுடை யோர்களும்
சிரத்தினிற் சூடுஞ் சிரோமணி போல்வான்.
ஆர்கலி போல வாழ்ந்த வறிவினன்.
பார்மலை போலப் பரந்தவெண் ணத்தினன்.
இவனுட னொருமொழி யெழில்பெற விசைத்தேன்;
யவனிலை பைய வறிவா னமைய
மிதுவே! ஓ! ஓ! வெழிற்பன்ன சாலை
வதிதருங் குயிலின் வார்த்தைக் குருகி,

யுதனுள் ளமைத்த வழகார் பளிங்கி
னிகமுறு பீடத் திருந்த மயிலுங்
களிநட மற்றுக் கலங்கி யுள்ளந்
தெளிவில தாகித் திகைத்த செயலையே
கற்பனை கலப்பநங் கருத்தையு மவ்வழி
யற்புத மாக வரைந்து,அவ னுள்ள
மறிந்திட னலமாம்! (விசுவநாதனை நோக்கி)
ஐயன்மீர்! கேண்மின்!
செறிந்த கொடிகள் சிறப்பொடு படர்ந்த
சாலையை நோக்குமின்! தனிக்குயி லொன்று
மேலிருந்த திசைநயம் விளம்பு கின்றது.
உள்ளொளி பரப்பு முயர்பளிங் கிருந்து,
தெள்ளு தேனிசை தெவிட்டா துண்டு,
களித்திடு கின்றதிக் கலாப மயிலும்!
அச்சுத. ஒளிப்பருங் காத லுற்றவோ ரிவை
மனக்கினி யானென மதித்திட லவனைத்
தனக்கொரு துணையெனத் தான்பெறக் கருதி
யன்னவன் குணங்க ளனைத்தையு நினைந்து
தன்னந் தனியளாய்த் தயங்குவள் போல,
குயிலிசை கேட்டுக் குனிநட மொழித்து
மயிலிது நின்றது, வம்மின்! காண்மின்!
விசுவ. உங்கை மொழியிவ ணுவக்கத் தக்கது!
நங்கை! என் னுரையு நயக்கற் பாலது!
நின்னுரை மிக்க நேர்மை கொண்டது!
முன்னவர் பெரியார்; முத்தியை நாடி,
யீசனைச் சேர, வெரியின் மெழுகுபோல்
பாசப் பவக்கடற் பத்தியா னீந்திட
வுள்ள முருகி, "ஒளிமணிப் பாவாய்!
எள்ளினுள் ளெண்ணெய்போ லெங்கும் பரந்தாய்!
கரும்பின் சுவையே! கருத்தினுட் கருத்தே!
விரும்புவா ருள்ளம் விளங்குமெய் விளக்கே!
கன்றினைப் பிரியுமோ காராம் பசுதான்?"
என்றுதான் கதறி, எவணினைச் சேர்வது
என்னத், தலைவி யிரங்கற் றுறையாத்,
தன்னுடைச் சிவன் றன்னையே தலைவியாட்,

பரமனைப் புருடனைப், பாடிக் கூடினர்
கரதலங் கூப்பியென் கண்கொளத் தக்கவர்,—
என்பரா வணிந்தோ னிணையடிக் கென்று
மன்பருக் காழி யருமறை முனிவனுங்,
தேவினுக் கினிய திருத்தாண் டகஞ்செய்
நாவினுக் கரசனும், நள்ளிருட் பொழுதரன்
சந்தெனக் கொண்ட தம்பிரா னாரூர்ச்
சுந்தர மூர்த்தியுஞ், சொல்லி னமுதையே
காணிக் கையென்று கரைந்து பாடிய
மாணிக் கவாச கனும், புகழ் வாய்ந்த
காலிபின் சென்ற கண்ணனை மறித்த
வாலி நாடனும், 'அத்தைத் தின்றுதான்
அங்கே கிடக்கும்' என் றருளிச் செய்ய,
சங்கை யொழிந்து சரண்புகு புலவன்
எம்மாழ் வாரென விசைத்த வாய்மொழி
நம்மாழ் வாரும், நானில மேத்தவே!—
நீயு மத்தகை நினைந்தனை, நங்காய்!
தோயு மன்பினுற் றேகையுட் படுத்திப்,
பாங்குடன் குயிலும் பாடு கின்றது.
ஆங்கது போல, அகிலமும் புரப்போன்
இடையறு வன்பொடு மிரங்கு மன்பரை
யடைந்திட வன்னியே யவாவுறு கின்றனன்,
பைங்கொடி! (அச்சுதனை நோக்கி)
அச்சுத! பாரினில், மாந்தர்
விந்தையை நலனை வெஃகிய பொருளை
விரும்பியே கலந்து விவாகஞ் செய்வர்.
தருவமர் குயிலுந் தனித்த மயிலு
மொன்றி யிரண்டிற் குயிரொன் றாகியே
நின்ற நிலைமை நேர்ந்து நோக்குறில்,
ஆடவன் மனமு மரிவை யுள்ளமு
நாடி யொன்றுத னன்மண மாமால்!
(ஓர் சேவகனும், மூர்த்தியம்மனும் உள்ளே பிரவேசிக்க)
சேவக. ஐயன்மீர்! உங்க ளச்சுவ மிரண்டுஞ்
செய்ய கல்லணை சேரப் பூண்டு,
காற்றை முகந்து, காற்குளம் பெற்றி,

யாற்றொறு வேகத் தமைந்து நின்றன.
அச்சுத. நாத! செல்லுதும்; நங்கையர் திலகமே!
போது நாங்கள்.
(சேவகன் பின்னேவர அச்சுதனும், விசுவநாதனும் விரைந்து செல்ல)
காஞ்ச. (பன்ன சாலையைநோக்கிச் சென்று)
புகன்ற குயிலு
மேகிடத் தனியே யிரங்குமென் மயிலே!
சோகமா யினையோ, கொடிவலை போல?
(பளிங்குமேடையிற் சாய்ந்து)
திருந்திய பளிங்குஞ் சீதளந் தருமென்
றிருந்தனன்; அதுவு மெரிபோற் சுடுதே!
(முல்லைமலர் மேலே உதிர)
நலங்கொளக் கொடியாய் நானுனை வளர்த்தேன்.
பொலங்கொண் மலரே! பொறியா யினையே!
(அன்றிலின் குரலைக்கேட்டு)
அன்றிலே! புன்ற னருங்குரற் கேட்ப
வின்றென தாவி யிரங்கு கின்றதே!
(இளந்தென்றல் மகரந்தம்பூசி நீர்த்திவலைவாரியிறைப்ப)
தென்றலே! கொடியாய்! திவலையோ டெழுந்த
மன்றலம் பொடியும் வாளரிக் கொணர்ந்தனை!
எனித் தனைவிரு தெடுத்தனை? ஏழை
தானித் துணையுந் தரிக்க வல்லளோ?
(அந்திவானை நோக்கி)
வடவைபோற் பரந்து வளர்ந்த செக்கரே!
சுடுதொழிற் கஞ்சினன். சுடரோன் றொடுகடற்
பட்டனன். இனியிப் பாவையைச்
சுட்டனை யென்பது சொல்லவும் வேண்டுமே?
(பூரணசந்திரன் உதிக்க)

(விருத்தம்)

எஞ்சும் பொருளைப் பெறத்திரைக ளெழப்பாற் கடலைச் சடைந்திடுநாள், துஞ்ச னீக்கு மமுதுடனே தோன்றி வளர்ந்தாயானலு, நஞ்சின் வாடை பட்டதொரு நயத்தா லிந்தக் கயத்துள்ள, கஞ்ச மலரோ டென்னையுநீ சுடவா னெண்ணி வந்தனையே. (1)

தண்மைக் கிரணம் பொழிந்துலகந் தழைப்பக் குளிர்ச்சி தனைநல்கு, மொண்மைக் குரியா னென்றுன்னை யுரைத்தார் பெரியா ரதுநிற்க, பெண்மைக் கென்றே யெரிகதிர்போற் பிறங்க விந்தப் பேருலகோர், உண்மைக் காக வுறுத்துவ்வென் றுரைத்த மொழியை விளக்கினையோ. (2)

(வேறு)

மார வேள்குடை மன்னிய நாளவன்
றீர முற்றுந் தெரிந்தனை கண்ணுதற்
போரி லங்கம் பொடிந்தது கண்டநீ
நேரி னிற்க நினைந்தனை நேர்மையே. (3)

பொங்கி நின்று புகைந்தெரி யூட்டினை
நங்கை யர்க்கிடர் நல்கினை யாதலின்
அங்க நாளு மழிந்துற லாயினை
யெங்கள் பாவ மிருந்தது திங்களே! (4)

பொன்னெ டும்பிறந் தேபுகழ் பூண்டனை
பென்னி லேழைய ரேங்குறச் செய்வதே
யுன்னி நின்ற துனக்கழ காகுமோ?
வென்னை நோக்கி யெழுந்திடு திங்களே! (5)

(நேரிசையாசிரியப்பா)

மூர்த்தி. எதடி! யம்ம!எதிரிவ ணிருந்த
பேதையை மறந்தனை, பேதுறு கின்றனை.
பொழுது சென்றது. பொன்மனைக்
கெழுக, எழுக, எந்திழை! எழுகவே!

(களம் 4 முற்றும்)

(முதல் அங்கம்—முற்றிற்று)

## அங்கம் 2—களம் 1.

---

வீரசேகரச்சோழன் தனதுபடைகளை அணி வகுத்துச் சோழமாளிகைப்புறத்தே தங்கினன். சேனை இருகூறாக வகுக்கப்பட்டு ஒரு கூறுக்குத்தானும், மற்றொன்றிற்குக் கோலாகலனும், படைத்தலைவராக அமைந்தனர். அரசன் படையில் குபேரன் யானைப்படைத்தலைவன். கோலாகலன் படையில் வில்வலன் விற்படைத்தலைவன். இவ்விதமணிவகுத்து இச்சேனை நாகமன் சேனையை எதிர்பார்த்து நிற்ப, ஆரியநாதன் தூதாகவந்து "பாண்டியனுக்குக் கன்னிநாட்டைத்தந்து சமாதானஞ்செய்துகொள்ள இஷ்டமா?" என்று வீரசேகரனைக் கேட்டான். அப்போது வீரசேகரன் தனது துணைவர் பலத்தைக்கருதிப் புன்னகைசெய்து கன்னி நாட்டைத்தரமுடியாது என்று மறுத்தான். ஆரியநாதன் போர் ஒன்றே நேருமென்று திரும்பி வந்தனன்.

## அங்கம் 2--களம் 1.

---

இடம்—சோழமாளிகை, சோழன் படைவீடு. காலம்—மாலை.
(வீரசேகரன், கோலாகலன், குணவர்மன், இராஜசேகரன், வில்வலன், குபேரன் முதலானவர்கள் வீற்றிருக்க)

(நேரிசை யாசிரியப்பா)

வீரசே. பற்றல ரேவகம் பாங்கர் வந்த
வொற்றரைப் பிடித்ததா வுரைத்தனை. அவரால்
பகையவர் சூழ்ச்சியும் படைத்துள வலியுங்
தொகைபெறுஞ் சேனைத் தொகுதியி னுழுவும்
அறிந்தனை கொல்லோ? ஆர்கலி போலச்
செறிந்த நம்படைத் திரளணி வகுத்துப்,
பகுதிக டோறும் படைத்தலை வீரர்
தகுதியிற் செலுத்தத் தந்தனை கொல்லோ?
கோலா. விரைகமழ் பைந்தார் வீர சேகர!
திரையெனப் படருறுந் திறனுடைப் புரவியின்
அளவுநான் கிரட்டி யாயிரம். கரியின்

வளப்படை யிரண்டுநூ றென்ன வந்தது.
வேலொடு வாள்வில் மின்னிட நின்ற
காலா ளிருபதி னாயிரக் கணக்கொடு
வந்த படையிரு வகுப்பா வகுத்துத்,
தந்தம் படைக்குத் தகுந்தவ கருத்தர்
நாகம னரிய நாதனு நின்றனர்
ஆக, அவருள வறிந்துநந் தானப்
பிளிறொலி கொண்ட பிறங்கன் மானுங்
களிறொன் றிரண்டு கலந்த நூறுந்,
தரங்க நிகர்ப்பத் தாவிச் செல்லுந்
துரங்கப் படையின் றொகுதியெண் ணாயிரங்,
கனைகழற் கச்சணி கைப்படைக் காலாள்
இனமிரு பத்தோ டிரண்டுநூ றாயிரம்,
ஆகநம் படையிரண் டணியா நிறுத்தினன்.
வாகை நெடும்புகழ் மன்னவ! நீயு
நானு மன்னவை நாயக மாக
வேனை வீரரோ டெழுவதா யெண்ணினன்.

வீரசே. அன்னதே செய்கை, யம்ம! அழகிதே!
கன்ன மதம்பொழி கரிப்படை யாவும்
என்வயிற் றருக; இருந்தனன் குபேரன்
வன்படை கொண்டு வருதினிக் கடலை
மந்தரம் போல மதித்திட நிற்பான்.
தந்திர நடத்துந் தடக்கைச் சிலையணி
வில்வலன் றன்னை விழைந்து கொள்கநீ.

குபே. மல்வலி கொண்ட மன்னவ னென்வயிற்
பொருத்திய நண்பெனைப் பொருட்படச் செய்தது; இங்
கருத்தியுமுளதெனக் கானைப் படைமேல்!
களிற்றிடையானுங் கலந்திடில், அவைகள்
பிளிறொலி யோடு பெரும்போர் செய்யுமால்!
மேனாட் பாரத மெய்ப்போ ரிடையில்,
ஆனைப் படைக்கோ ரதிபதி யான
பகதத் தனைப்போற் படைத்துள வலியெலா
மகிதலத் துள்ளார் மதித்திடக் காட்டி,
மன்னவ னுரைத்த வாய்மொழி தவறு
தென்னையுங் காத்தற் கிருந்தன னெண்ணியே.